**ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 6**

**பத்திரிக்கை செய்தி**

அரசு கலை (ம) அறிவியல் கல்லூரி மற்றும் கல்வியியல் கல்லூரிகளுக்கான உதவிப் பேராசிரியர் காலிப்பணியிடங்களுக்கான பணித்தெரிவிற்காக ஆசிரியர் தேர்வு வாரியத்தால் அறிவிக்கை எண். 12/2019, நாள். 28.08.2019 மற்றும் 04.10.2019 அன்று வெளியிடப்பட்டது. மேற்காணும் பணியிடங்களுக்கான இணையவழியாக விண்ணப்பிக்க இறுதி நாள்.30.10.2019 என அறிவிக்கப்பட்டது. விண்ணப்பதாரர்களிடமிருந்து இறுதி நாளை நீட்டிக்கும் பொருட்டு பல்வேறு விண்ணப்பங்கள் பெறப்பட்டதின் பேரில் இறுதி நாள் 15.11.2019 மாலை 5 மணி வரை விண்ணப்பதாரர்கள் பதிவேற்றம் செய்திடும் வகையில் காலநீட்டிப்பு வழங்கப்பட்டது.

இதுவரை 44767 விண்ணப்பதாரர்கள் பதிவுகளை செய்துள்ளதாகவும் இதில் 33128 விண்ணப்பதாரர்கள் மட்டும் முழுமையாக விண்ணப்பத்தினை சமர்ப்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது (15.11.2019 மதியம் 12.00 மணி வரை). எனவே ஆசிரியர் தேர்வு வாரியம் கீழ்க்கண்டவாறு முடிவெடுத்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் இன்று மாலை 5.00 மணியுடன் நிறைவு பெறுகிறது. அதன் பிறகு புதிதாக யாரும் விண்ணப்பிக்க முடியாது. ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கு மட்டும் முன் அனுபவச் சான்றுகளை பெற காலதாமதம் ஆவதை கருத்தில் கொண்டு பணி அனுபவச் சான்றுகளை மட்டும் பதிவேற்றம் செய்திட பின்னர் வாய்ப்பு வழங்கப்படும். எனவே, பணி அனுபவச் சான்றுகளை பெற முடியாத விண்ணப்பதாரர்கள் இம்மாத இறுதிக்குள் சம்பந்தப்பட்ட அலுவலரால் மேலொப்பமிட்ட சான்றுகளை பெற்று தயாராக வைத்திட அறிவுறுத்தப்படுகின்றனர். பதிவேற்றம் செய்வதற்குரிய தேதிகளை விண்ணபத்தாரர்களின் அலைபேசிக்கு குறுஞ்செய்தியாகவும், மின்னஞ்சல் முகவரிக்கும் ஆசிரியர் தேர்வு வாரியம் அனுப்பி வைக்கும். அதன் பிறகு எந்த வாய்ப்பும் வழங்கப்பட மாட்டாது.

மேலும், கல்வியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களிடம் இருந்து சில கூடுதல் விவரங்கள் தேவைப்படுகிறது. அவ்விவரங்களை பதிவு செய்திட டிசம்பர் 2019 முதல் வாரத்தில் வாய்ப்பு வழங்கப்படும். கூடுதலாக கேட்கப்பட்ட விவரங்களை இணைய வழி விண்ணப்பத்தில் (ஏற்கனவே பதிவு செய்யப்பட்டது) பதிவேற்றம் செய்திட கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். என்ன விவரங்கள் பதிவு செய்திட வேண்டும் என்பது மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி மூலமாக அனுப்பப்படும்.

நாள் : 15.11.2019

**தலைவர்**